# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1999/48 - 2016 දෙසැම්බර් මස 30 වැනි සිකුරාදා - 2016.12.30

*1999/48 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.*

கயந்த கருணாதிலக,
பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

கொழும்பு,
2016 திசெம்பர் 15.

கட்டளை

1. இந்தக் கட்டளை 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன (படமாளிகை ஒளிப்பட விவரக்குறிப்பு) கட்டளை என அழைக்கப்படலாம் எனவும் இச் சட்டம் 2017 ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் செயல்வலுப்படுத்தப்படலும் வேண்டும்.

2. இலங்கையில் செயற்படுகின்ற சகல தியேட்டர்களிலும் அமுலில் உள்ளவாறு எண்முறை தொழில்நுட்ப ஒளிப்பட விவரக் குறிப்பு (இதனகத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' என அழைக்கப்படுகின்ற) இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் அதனது பணிகளுக்காக பிரகடனப்படுத்துகின்ற நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு உட்பட்டு கிடைமட்ட மற்றும் செங்குத்து பிக்சல் அதிகரித்த பெறுமானம் 2048×1080 (பிக்சல் 2,211,840) அல்லது 2K அல்லது 2.2 மெகாபிக்சல் என்னும் ஆகக் குறைந்த பெறுமானத்துடன் செயற்படல் வேண்டும்

3. (1) தற்பொழுது நடைமுறையிலுள்ள தியேட்டரில் அல்லது புதிதாக நிருமாணிக்கின்ற தியேட்டரில் ஒளிப்பட முறையை எண்முறை தொழில்நுட்பத்துக்கு மாற்றியமைப்பதற்கு அல்லது நிறுவும்போது மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 கட்டளைகளிலும் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த விவரக் குறிப்பை பயன்படுத்த வேண்டும் எனவும் குறித்த நடைமுறை தொடர்பில் கூட்டுத்தாபனத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கவும் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் மூலம் உரிய மாற்றத்துக்கு அல்லது நிறுவுவதற்கு உரியதான நிபந்தனைகள் மற்றும் நியதிகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த மாற்றம் அல்லது நிறுவுதல்

நிறைவடைந்ததன் பின்னர் குறித்த தியேட்டருக்காக கூட்டுத்தாபனத் தலைவரினால் நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு உட்பட்டு இந்த அட்டவணையில் திட்டவட்டமாகக் காட்டப்பட்டுள்ள கட்டணத்தின் மீது ஆண்டுக்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட வேண்டியதாக எண்முறை தொழில்நுட்ப திரைப்படக் காட்சிக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும்.

4. (2) கூட்டுத்தாபனத்தின் எழுத்து மூலம் அங்கீகாரம் பெற்றதும் தற்பொழுது என்முறை தொழில்நுட்ப ஒளிப்பட முறைக்கு மாற்றப்பட்டுள்ள சகல தியேட்டர்களும் கூட்டுத்தாபன தலைவரின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த அட்டவணையில் திட்டவட்டமாகக் காட்டப்பட்டுள்ள கட்டணத்தின் மீது ஆண்டுக்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட வேண்டியதாக எண்முறை தொழில்நுட்ப திரைப்படக் காட்சிக்கான உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. (3) ஏதும் தியேட்டரில் மேலும், ஒளிப்பட முறையாக 35 மில்லிமீட்டர் படத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுமேயானால் இது தொடர்பில் எழுத்து மூலம் கூட்டுத்தாபனத் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். இவ்வாறான படமாளிகைகளுக்காக கூட்டுத்தாபன தலைவரின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த அட்டவணையில் திட்டவட்டமாகக் காட்டப்பட்டுள்ள கட்டணத்தின் மீது ஆண்டுக்கு ஒரு தடவை புதுப்பிக்கப்பட வேண்டியதாக 35 மில்லிமீட்டர் படத் தொழில்நுட்பத் திரைப்படக் காட்சிக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும்.

6. (4) மேலே (1), (2) மற்றும் (3) ஆம் பந்திகளில் காட்டப்பட்டுள்ள படமாளிகைகளில் இதனகத்துப் பின்னர் திரைப்படக் காட்சிகளின் போது மேலே குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட ஒளிப்பட விவரக்குறிப்புகளுக்கு அப்பால் நிதி அறவிட்டு, பொது மக்களுக்கான காட்சிகளைக் காண்பித்தலாகாது. எவ்வாறாயினும் திரைப்பட விழாவொன்றின் போது அல்லது உதவி அல்லது பாராட்டுக் காட்சிகளின் போது அல்லது விசேட சந்தர்ப்பங்களுக்கான காட்சிகளின் போது கூட்டுத்தாபனத் தலைவரின் முன் அங்கீகாரத்தின் மீது மேலே குறிப்பிட்ட நியமங்களையும் விஞ்சி தொழில்நுட்ப முறையின் ஊடாக திரைப்படங்களை காட்சிப்படுத்தலாம்.

7. இந்தக் கட்டளையின் கீழ் உத்தரவுப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட ஏதேனும் படமாளிகை உரிய உத்தரவுப் பத்திரத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள, இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தொழில்நுட்பத் தரங்கள், துப்பரவேற்பாட்டு வசதிகள் மற்றும் பார்க்கக் கூடிய வசதிகள் தொடர்பிலும் தலைவரினால் பிறப்பிக்கப்படுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகச் செயற்படல் வேண்டும்.

8. (அ) உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டதானது ஏதேனும் படமாளிகை தொடர்பிலாயின், குறித்த படமாளிகையின், மேலே 3 (4) மற்றும் 4 ஆவது கட்டளையின் கீழ் தலைவரினால் பிறப்பிக்கப்படுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகளை உரிய உத்தரவுப்பத்திரதாரியினால் நடைமுறைப்படுத்துவதைத் தவிர்க்குமிடத்து அல்லது மீறுமிடத்து:

(ஆ) தலைவரினால் உத்தரவுப் பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்தல் அல்லது தண்டப்பணத்தை விதித்தல் என்னும் எந்தவிதத்திலுமான பணிப்புகளையும் விடுக்கலாம்.

9. இந்தக் கட்டளையில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

“பிக்ஸல்” என்பது, ஆங்கிலத்தில் pixel எனப் பொருள்படும்.

“மெகா பிக்ஸல்”என்பது, ஆங்கிலத்தில் megapixel எனப் பொருள்படும்.

“35 மில்லிமீட்டர் படம் ” என்பது, ஆங்கிலத்தில் 35 millimeter celluloid எனப் பொருள்படும்.

“படமாளிகை” என்பது, இலங்கையில் நடைமுறையில் உள்ள மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சகல திரைப்படக் காட்சிச்சாலைகள் எனப் பொருள்படும்.

“திரைப்படம்”என்பது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்கள் எனப் பொருள்படும்.

“இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்” என்பது, 1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1971ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

*3 (1)இ (2) மற்றும் (3) ஆம் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தரவுப் பத்திரக் கட்டணம் 150 ஆசனங்கள் வரையிலான படமாளிகைகளுக்கு ஐயாயிரம் ரூபா (ரூபா. 5,000/), 350 ஆசனங்கள் வரையிலான படமாளிகைகளுக்கு ஏழாயிரத்து ஐநூறு ரூபா (ரூபா. 7,500/) மற்றும் 350 மேற்பட்ட ஆசனங்களைக் கொண்ட படமாளிகைகளுக்கு பத்தாயிரம் ரூபா (ரூபா. 10,000/) வாக இருத்தல் வேண்டும்.*

*1- 444/1*

---

**1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.*

*கயந்த கருணாதிலக,*
*பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

கொழும்பு,
*2016 திசெம்பர் 15.*

**கட்டளை**

1. *இந்தக் கட்டளை 2017 ஆண்டின் 2 இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன (நானாவிதக் கட்டணங்கள்) கட்டளை என அழைக்கப்படும் என்பதுடன் 2017 ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

2. *(1) இலங்கையில் நடைமுறையில் உள்ள படமாளிகை 2016 ஆண்டின் 1 இலக்க இலங்கை தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபன (படமாளிகை ஒளிப்பட விவரக்குறிப்பு) கட்டளையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எண்முறை தொழில்நுட்ப ஒளிப்பட முறைக்கு மாற்றியதன் பின்னர் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" என அழைக்கப்படுகின்ற) இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரத்தின் மீது நுழைவுச் சீட்டுக்கான பிரவேசக் கட்டணத்துக்கு மற்றும் களியாட்ட வரிக்கு மேலதிகமாக சகல படமாளிகையினாலும் (இதனகத்துப் பின்னர் "அதிகரிப்பு" எனக் குறிப்பிடப்படுகின்ற) அறவிட்ட கட்டணம்,*

*(1.1) உள்நாட்டு அல்லது வெளிநாட்டுத் திரைப்படங்களுக்காக நுழைவுச் சீட்டின் பெறுமதியில் நூற்றுக்கு ஏழு (7%) விகிதம் அறவிடல் வேண்டும்.*

(அ) *குறித்த நூற்றுக்கு ஏழு (7%) விகிதத் தொகையில் மூன்று ரூபா (ரூபா. 3/)வும் உள்நாட்டுத் திரைப்படமாயின் இதன் தயாரிப்புக்கு அல்லது வெளிநாட்டுத் திரைப்படமாயின் ஒரு ரூபா ஐம்பது சதம் (ரூபா. 1.50/=) விகிதமும் 1986 ஆண்டின் 3 இலக்க சினிமாக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்புக்கும் மற்றும் 1993 ஆம் ஆண்டின் திசெம்பர் 27 ஆந் திகதியிட்ட 799/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் நிறுவப்பட்டுள்ள தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நிதியத்துக்கும் ;*

(ஆ) *என்முறை தொழல்நுட்ப நாளாந்த நுழைவுச் சீட்டு அறிக்கைக்கு இரண்டு ரூபா (ரூபா.2/) வும் ;*

(இ) *மேலே குறிப்பிட்ட கொடுப்பனவுகள் குறைத்ததன் பின்னர் மீதமாகவுள்ள தொகையில் நூற்றுக்குத் தொண்ணூாரு (90%) விகிதம் படமாளிகை ஒளிப்பட முறை 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன (படமாளிகை ஒளிப்பட விவரக்குறிப்பு) கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றியமைக்கப்பட்ட படமாளிகை அல்லது முதலீட்டில் மீதி நூற்றுக்குப் பத்து (10%) விகிதம் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக் கூடியவாறு பகிர்ந்து செல்லல் வேண்டும் ;*

*(1.2) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பாராட்டுப் பெற்ற திரைப்படத்துக்கான நுழைவுச் சீட்டுப் பெறுமதியில் நூற்றுக்கு ஏழு தசம் ஐந்து (7.5%) விகிதம் அறவிடல் வேண்டும்.*

(ஈ) குறித்த நூற்றுக்கு ஏழு தசம் ஐந்து (7.5%) தொகையில் உள்நாட்டு திரைப்படமாயின் இதன் தயாரிப்பாளருக்கு மூன்று ரூபா ஐம்பது சதம் (ரூ. 3.50/) உம் வெளிநாட்டுத் திரைப்படமாயின் திரைப்படத்தை விநியோகிக்கின்ற உத்தரவுப்பத்திரதாரருக்கு இரண்டு ரூபா ஐம்பது சதம் (ரூ. 2.50/) உம் ;

(உ) உள்நாட்டுத் திரைப்படமாயின் இதை விடுவிக்கின்ற படமாளிகைக்கு இரண்டு ரூபா (ரூபா. 2/) உம்;

(ஊ) வெளிநாட்டுத் திரைப்படமாயின் இதை விடுவிக்கின்ற படமாளிகைக்கு ஒரு ரூபா ஐம்பது சதம் (ரூபா. 1.50/) உம் ;

(எ) எண்முறை தொழில்நுட்ப நாளாந்த நுழைவுச் சீட்டு அறிக்கைக்கு இரண்டு ரூபாவும்(ரூபா. 2/) உம்

(ஏ) மேலே குறிப்பிட்ட கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டதன் பின்னர் மீதியாகவுள்ள தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு (90%) விகிதம் படமாளிகை ஒளிபரப்பு முறை 2016 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன (படமாளிகை ஒளிப்பட விவரக்குறிப்பு) கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றியமைக்கப்பட்ட படமாளிகை அல்லது முதலீட்டில் மீதி நூற்றுக்குப் பத்து (10%) கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக் கூடியவாறு பகிர்ந்து செல்லல் வேண்டும்.

திரைப்படத்தின் நுழைவுச் சீட்டு விற்பனையில் கிடைக்கின்ற தொகையில் அதிகரிப்பு மற்றும் களியாட்ட வரிக் கழிப்பின் பின்னர் மீதமாகவுள்ள தொகை “திரைப்படக் கூலி” எனக் குறிப்பிடப்படும்.

3. திரைப்படத்தின் ஆரம்பச் சுற்றுக் காட்சிகளின் போதும் மற்றும் முதற் சுற்றுக் காட்சிகளின் போதும் கிடைக்கின்ற மொத்தத் திரைப்படக் கூலி -

(ஐ) உள்நாட்டுத் திரைப்படம் தொடர்பிலாயின் பின்வருமாறு விநியோகிக்க வேண்டும் :-

(i) தயாரிப்பாளர் 45%
(ii) படமாளிகை 45%
(iii) உத்தரவுப் பத்திர விநியோகத்தர் 10%

(ஒ) வெளிநாட்டுத் திரைப்படம் தொடர்பிலாயின் பின்வருமாறு விநியோகிக்க வேண்டும் :-

(i) இறக்குமதியாளர் 40%
(ii) படமாளிகை 50%
(iii) உத்தரவுப் பத்திர விநியோகத்தர் 10%

4. திரைப்படத்தின் ஆரம்பச் சுற்றுக் காட்சிகள் மற்றும் முதற் சுற்றுக் காட்சிகள் நீங்கலாக படமாளிகையில் காட்சிப்படுத்தும் போது கிடைக்கின்ற மொத்தத் திரைப்படக் கூலி -

(ஓ) உள்நாட்டுத் திரைப்படம் தொடர்பிலாயின் பின்வருமாறு விநியோகிக்க வேண்டும் :-

(i) தயாரிப்பாளர் 30%
(ii) படமாளிகை 60%
(iii) உத்தரவுப் பத்திர விநியோகத்தர் 10%

(ஔ) வெளிநாட்டுத் திரைப்படம் தொடர்பிலாயின் பின்வருமாறு விநியோகிக்க வேண்டும்:-

(i) இறக்குமதியாளர் 30%
(ii) படமாளிகை 60%
(iii) உத்தரவுப் பத்திர விநியோகத்தர் 10%

5. இந்தக் கட்டளையின் கீழ் கூட்டுத்தாபனத்துக்கு அறவிடப்பட வேண்டிய ஏதும் நிதியை அவ்வாறு அனுப்புவதைத் தவிர்க்கின்ற சகல படமாளிகைகளினாலும் படமாளிகைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய மாதாந்த மீதித் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்ற இவ்வாறு செலுத்தாது தவிர்த்துக் கொண்ட தொகையின் மீது, மாதத்துக்கு நூற்றுக்கு ஒன்று (1%) என்னும் விகிதத்திலான தொகையை வட்டியாகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

6. திரைப்பட விழாவின் போது அல்லது உதவிக் காட்சியின் போது கூட்டுத்தாபனத் தலைவரின் எழுத்தினாலான அனுமதியுடனான திரைப்படமானால் அன்றி, எந்தவொரு படமாளிகையினாலும் இந்தக் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகரிப்பு, களியாட்ட வரி மற்றும் திரைப்படக் கூலி போன்ற தொகைகளின் மொத்தத்துக்கும் கூடுதலான ஏதும் கட்டணமொன்றை ஏதேனும் திரைப்படமொன்றை காட்சிப்படுத்துவதற்கு அறவிடப்படல் ஆகாது.

7. மேலே குறிப்பிட்ட 2 (அ), (ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறவீட்டுப் பெறுமதி அந்தந்த படமாளிகைகள் இந்தக் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பித்த திகதி தொடக்கம் இரண்டு ஆண்டு (2) காலத்துக்கு மாற்றமடையலாகாது. ஆரம்ப இரண்டு ஆண்டு (2) காலம் தாண்டியதன் பின்னர் கூட்டுத்தாபனத் தலைவரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஊடாக திட்டவட்டமான காலப்பகுதிக்காக குறித்த பெறுமதியை வெவ்வேறான நூற்றுவிகிதமாக அதிகரிக்கலாம்.

8. இந்தக் கட்டளைகள் செயல்வலுவில் உள்ள எந்தவொரு படமாளிகையிலும் மேலே குறிப்பிட்ட கட்டளைகளின் கீழ் தலைவரினால் பிறப்பிக்கப்படுகின்ற நியதிகள் மற்றும் நிபந்தனைகள் நடைமுறைப்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுமிடத்து அல்லது மீறுமிடத்து:

(ஆ) தலைவரினால் உத்தரவுப் பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்தல் அல்லது தண்டப்பணத்தை விதித்தல் என்னும் எந்தவொரு பணிப்பையும் விடுக்கலாம்.

9. 1993 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதியிட்ட 799/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன (நானாவிதக் கட்டணங்கள்) கட்டளை மற்றும் 1996 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 24 ஆந் திகதியிட்ட 946/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 1 இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன (நானாவிதக் கட்டணங்கள்) கட்டளை மற்றும் 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதியிட்ட 1502/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2007 ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன (நானாவிதக் கட்டணங்கள்) கட்டளைகள் இதன் மூலம் இரத்துச் செய்யப்படுகின்றது.

10. இந்தக் கட்டளையில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

"எண்முறைத் தொழில்நுட்ப ஒளிபரப்பு முறை" என்பது, 2016 ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன (படமாளிகை ஒளிப்பட விவரக்குறிப்பு) கட்டளையின் ஊடாக வெளியிடப்பட்ட நியதிகள் எனப் பொருள்படும் .

"எண்முறைத் தொழில்நுட்ப நாளாந்த நுழைவுச் சீட்டு அறிக்கை" என்பது, ஆங்கில மொழியில் electronic daily report எனப் பொருள்படும் .

"படமாளிகை" என்பது, இலங்கையில் நடைமுறைப்படுத்துகின்ற மற்றும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சகல திரைப்படக்காட்சிச் சாலைகளும் எனப் பொருள்படும் .

"திரைப்படம்" என்பது, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு திரைப்படம் எனப் பொருள்படும் .

"உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பாராட்டுக்களைப் பெற்ற திரைப்படம் " என்பது, 2016 ஆண்டின் 2 ஆம் இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன (திரைப்பட விநியோக) கட்டளைகளில் பொருள்கோடப்பட்டுள்ள திரைப்படம் எனப் பொருள்படும் .

"திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன நம்பிக்கைப் பெறுப்பு" என்பது, 1986 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள திரைப்படக் கலைஞர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கைப் பொறுப்பு எனப் பொருள்படும் .

"தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம்" என்பது 1993 ஆம் ஆண்டு திசெம்பர் 27 ஆந் திகதியிட்ட 799/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் நிறுவப்பட்ட தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் எனப் பொருள்படும் .

"இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் " என்பது, 1980 ஆண்டின் 45 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் நிறுவப்பட்ட இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும் .

2- 444/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.